குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண். 9/2011

அ.சா. 1

2024–ம் ஆண்டு ஆகஸ்ட் 27–ம் தேதி செவ்வாய்கிழமை அரசு தரப்பு சாட்சி 01–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.ஆனந்தன் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கிருஷ்ணராஜன் | ஜாதி | |
| தந்தை பெயர் | நாராயணன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.31 மணி,

Accused Mohamad Arif present. Advocate Mr.K.T.Selladurai present for accused. Advocate APP Mr.P.Suresh present.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

1. விபத்து பற்றி நேரடியாக எனக்கு தெரியாது என்றால் சரி. நான் ஜேசிபி இயந்திரம் வைத்து வேலை செய்கிறேன். சம்பவத்தின் போது எனது அப்பாவிற்கு சுமார் 75 வயது இருக்கும் என்றால் சரி. சம்பவத்தின் போது எனது அப்பாவிற்கு இருசக்கர வாகன ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் ஓட்டுநர் உரிமம் இருந்தது ஆனால் புதுப்பிக்கவில்லை. மேற்படி இருசக்கர வாகன ஓட்டுநர் உரிமத்தை காவல் நிலையத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

2. எனது அப்பாவிற்கு வாகன ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல. நான் எனது அப்பாவை மணிபால் மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன் என்றால் சரி. சம்பவத்தின் போது எனது அப்பா ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனத்தின் பதிவெண் நினைவில்லை. ஆனால் அது நீலக்கலர் டிவிஎஸ் champ என்ற வாகனமாகும். எனது அப்பாவின் மீது மோதிய வாகனத்தின் பதிவெண் எனக்கு தெரியாது. நான் சம்பவ இடத்திற்கு ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனத்தின் பதிவெண்ணை முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரி.

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2024.08.27 17:47:27 +0600

3. சம்பவ இடம் கருப்பூர் அரசு பொறியியல் கல்லூரிக்கு அருகில் என்றால் சரி. சேலம் டூ ஓமலூர், மற்றும் ஓமலூர் டூ சேலம் செல்லும் ஆகிய தேசிய நெடுஞ்சாலைகள் இரு வழி சாலை என்றால் சரி. ஓமலூர் டூ சேலம் தேசிய நெடுஞ்சாலையின் சாலையின் இடது ஓரமாக 2–3 அடி அளவிலான சாலையில் தான் இருசக்கர வாகனங்கள் செல்ல வேண்டும் என்றால் சரி. சம்பவத்தன்று புகார் கொடுத்தேன்.

4. சம்பவத்திற்கு மறுநாள் காலை 11.00 மணிக்கு போலீசார் என்னை விசாரித்தார்கள். விபத்தில் இறந்த நபர் எனது அப்பா என்பதால் நஷ்டஈடு பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது அப்பாவிற்கு ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வயது முதிர்வின் காரணமாக அஜாக்கரதையாக வாகனத்தை ஓட்டி தாமாக விபத்தை ஏற்படுத்திக் கொண்டார் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த பொய்வழக்கிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

விசாரணை முடிந்த நேரம்: 01.45 மணி,

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2024.08.27 17:47:31 +0600